மறுபடியும் ஐந்தாண்டுகள் கழித்து, மக்கட்தொகை அதிகரிப்பு ஏற்பட்ட அடிப்படையில் 4,728 பேரைக் கொண்டிருக்கும் பிரம்மதேசப் பகுதியில் நாங்கள் நடத்த முடியும். கோடாறங்குளத்தில் 1,768 பேர்தான் இருக்கிறார்கள்—அந்த வட்டாரத்தில் அமைக்கும்போது பத்தாயிரம் பேருக்கு ஒன்று என்ற முறையில் அதிக மக்கள் தொகை அமையும் என்று சொல்லி, 18—1—1972 அன்று பஞ்சாயத்து ஒன்றியத்தில் அவ்வாறு தீர்மானிக்கப்பட்டு அந்த ஒன்றியத் தீர்மானம் அரசுக்கு அனுப்பப்பட்டு, அப்படி அனுப்பப்பட்ட அடிப்படையில் அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. கோடாறங்குளத்தில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கியது. பிரம்மதேசத்தில் இப்பொழுது கட்டடம் கட்டப்பட்டு, அதில் இயங்கி வருகிறது. கோடாறங்குளத்தில் இயங்கினால் அரசாங்கத்தின் உதவித்தொகை கிடைப்பதற்கில்லை என்று ஆடிட் அப்ஜெக்ஷன் தெரிவித்தது. பிரம்மதேசத்தில் நடத்துவதற்கு அனுமதி கேட்கப்பட்டது. அதற்குரிய காரணம் காட்டப்பட்டது. ஒன்றியம் தீர்மானித்தது. எனவே, "நன்றாக இயங்கிற்று அல்லவா?" என்ற கேள்வி எழவில்லை.

Modern Mortuaries

* 271 *Q.*—Thiru *N. K. PALANISWAMY* : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to set up modern mortuaries in the Government Hospitals in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : விவர அறிக்கை@ ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : இந்த நவீன சவக்கிடங்குகளை தாலூக்காக்கள் அளவில் கூட வைத்திருப்பதன் காரணம் என்ன என்று தெரியவில்லை. இதற்காக உயர்ந்த அதிகாரிகள் எல்லாம் நியமிக்கப்படுகிறார்கள். அரை உயிரோடு இருக்கிறவர்களை எல்லாம் கூட அங்கே இழுத்துக்கொண்டு போய் போடுவதற்கு இதுபோல இதை அதிகப்படியாகச் செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுகள் இருக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சவத்திற்கு கூட உயிர் வந்துவிடுகிறது என்று சொல்லலாம் என்றாலும் அரை உயிரோடு இருப்பவர்களை எல்லாம் சவக்கிடங்குகளில்

@104—107-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1975 மார்ச் 11]

கொண்டுபோய்ப் போட்டுவிடுகிறார்கள் என்பது உண்மை அல்ல. மேலும் இந்தச் சவக் கிடங்குகளை பல இடங்களில் அமைக்கவில்லை. நான்கு மாவட்ட தலைநகர மருத்துவ மனைகளில் நோயாளிகள் அதிகம், கொலை செய்யப் பட்டவர்களுடைய சடலம் மறுபடியும் பரிசோதனைக்காக வைக்கப்பட வேண்டிய நிலை அதிகம் இருக்கிறது. இது போன்ற காரணங்களினால் நவீன சவக்கிடங்கு கட்டப்பட வேண்டுமென்பது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது. அவை திருச்சி, கடலூர், சேலம் தூத்துக்குடி, ஆகிய நான்கு இடங்களில்தான் கட்டுகின்ற ஆலோசனை இருக்கிறது. இவற்றைத் தவிர எதிர்காலத்தில் இன்னும் சில மருத்துவ மனைகளிலும் கட்டுவதற்கு ஆலோசனை இருக்கிறதே தவிர, தாலுக்கா மருத்துவ மனைகளில் இப்போது ஏற்படுத்துகிற நிலை இல்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சில பேஷண்டுகள் இறந்து விட்டால் அவர்களைக் கொஞ்சம் நேரம் அவர்களது படுக்கையிலே வைத்து நல்ல முறையில் பரிசோதனை செய்து உயிர் பிரிந்துவிட்டதா என்பதைத் தெரிந்து கொண்டே சவக் கிடங்கிற்கு அனுப்பி வைப்பது நல்லது. திரு. பழனிசாமி கூறியது போல பலயிடங்களில் இறந்துவிட்டதாக மார்ச்சரீசுக்குஅ னுப்பப்பட்டு பிறகு உயிர் வந்ததாக எடுத்து வரப்பட்ட கேஸ்கள் இருக்கின்றன. ஆகவே சவக்கிடங்கிற்கு நன்றாகப் பரிசோதனை செய்த பிறகு சில மணி நேரங்களுக்குப் பிறகே அனுப்பப்படவேண்டுமென்று உத்தரவிடுவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இனி புதிதாக உத்தரவு பிறப்பிக்க வேண்டியதில்லை. மாண்புமிகு அம்மையார் அவர்கள் அமைச்சராக இருந்தபோதே அதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. எங்காவது இதுபோல தவறு நடந்தால் it is a serious offence தவறு நடந்தால் அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வளவு பொறுப்பற்ற தன்மையில் பொறுப்புள்ள அதிகாரி யாரும் நடந்து கொள்ளமாட்டார்கள். இறந்துபோனவுடன் பரிசோதனை செய்ய வேண்டுமென்பது கட்டாயமான ஒரு கடமை. அந்தக் கட்டாயமான கடமையைக் கூடச் செய்யத் தவறியிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டால் அவர் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். இன்றைக்கு நாலாயிரத்திற்கும் மேற்பட்ட டாக்டர்கள் இருக்கிறார்கள். சாவு எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்றாலும் தினமும் ஆயிரக்கணக்கில் இறக்கிற நிலைமை இருக்கத்தான் செய்கிறது. இறந்தவர்களை உடனே சவக்கிடங்கிற்கு அனுப்பி விடுவதும் இல்லை. குறைந்தது ஆறு, ஏழு மணிகள் ஆகிறது அனுப்புவதற்கு. சவக்கிடங்கு இல்லாததால் யாரும் உயிர் பெற்றுவிடுவதில்லை. அதிகாரிகள் பொறுப்பை உணர்ந்தே நடப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இந்த நவீன சவக் கிடங்கு வட ஆற்காடு மாவட்டத் தலைநகர் வேலூரில் இல்லை. வேலூரில் ஏற்கனவே ஒரு முஸ்லீம் இனத்தைச் சேர்ந்த பிணம் சவக்கிடங்கு வசதி இல்லாத காரணத்தால் ஆற்றுப்படுகையில் புதைக்கப்பட்டு பின்னர் அதைத் தேடினார்கள். ஆகவே ஒவ்வொரு மாவட்டத் தலை நகர மருத்துவமனைகளிலும் நவீன சவக் கிடங்குகளை ஏற்படுத்த அரசு முன் வருமா?

அடுத்து சவக்கிடங்குக்கு அனுப்பப்பட்ட பிறகு உயிர் பெற்று வருவதைச் சொன்னார்கள். என் அனுபவத்தில் சொல்ல முடியும். என்னுடைய பாட்டியார் இறந்து 8 மணி நேரத்திற்குப் பிறகு சுடுகாட்டிற்குக் கொண்டு போகிற நேரத்தில் உயிர் வந்தது. அப்படி என் வருகிறது என்பதைச் சிறந்த டாக்டர்களை வைத்து ஆராய்ச்சி நடத்துவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, சில பேர்களுக்கு உயிர் நீங்கியதற்கான அடையாளங்கள் அத்தனையும் காணப்பட்டு, பரிசோதனை செய்கிறபோதும் இறந்துவிட்டதாக முடிவு எடுக்கப்பட்டு மறுபடியும் சில நேரம் கழித்து அவர்களுக்கு உயிர்ப்புச் சக்தி திரும்பி வந்துவிடுகிற நிலையில் இறந்தவர்கள் எழுந்துவிடுவதும் உண்டு. எழுந்தவர்களை எழுந்துவிடாமல் இருக்க அடித்துக் கொன்றும் இருக்கிறார்கள். இதில் இந்து பிணம், முஸ்லீம் பிணம், கிறிஸ்துவ பிணம் என்கின்ற வேறுபாடு இல்லை. மருத்துவ மனையில் இறந்து, விஞ்ஞான அடிப்படையில் பரிசோதனை செய்து இறந்துவிட்டதாகத் தீர்மானிக்கப்பட்ட எல்லா சவங்களுமே இப்படி உயிர்ப்புச் சக்தியைப் பெற்றுத் திரும்புவது என்கிற நிலை இல்லை.

வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு பெண் இறந்து, அந்தச் சவத்தைக் கோரிப் பெறுவார் யாரும் இல்லாத காரணத்தால் நகராட்சி மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டு அந்தப் பெண் புதைக்கப்பட்டதற்கும் அங்கே சவக் கிடங்கு இல்லையென்பதற்கும் சம்பந்தம் இல்லை. அது வேறு. இது வேறு.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, கோவை நகராட்சி மருத்துவ மனை மிக முக்கியமான மருத்துவ மனையாயிற்றே. அங்கே நவீன சவக் கிடங்கினை ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அங்கும் விரைவில் கட்ட வேண்டுமென்று அரசு ஆலோசனை வழங்கியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சவக் கிடங்குகளுக்கு இவ்வளவு டிமாண்டு இருக்கிறதே!

இருதுமால் நதி.

*272 வினா.—திரு. த. சோணையா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் உதயமாகி இராமநாதபுரம் மாவட்டம் வழியாகச் செல்லும் இருதுமால் நதியின் இரு கரைகளையும் பழுது பார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.